[10th March 1969

திண்டுக்கல் நகரசபை வட்ட பிரிவினை

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திண்டுக்கல் நகரசபை வட்ட பிரிவினையை உயர்நீதி மன்றம் ரத்து செய்ததா ?

(இ) ஆமெனில், அதன்மேல் அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : (அ) திண்டுக்கல் நகராட்சி சம்பந்தப்பட்ட 22—11—1967-ம் தேதிய கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண் (நிலை) 2146-ஐ மொத்த முப்பது வார்டுகளில் இருபத்தேழு வார்டுகளும் பெண் அங்கத்தினருக்கு ஒதுக்கப்பட்ட இருபதாவது வார்டும் பொருத்த வரையில் உயர் நீதி மன்றம் தனது 5—11—1968 தேதிய தீர்ப்பில் ரத்து செய்தது.

(இ) மேற்படி ஆணையை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் ரிட் மேல் மனு தாக்கல் செய்வது பற்றி விஷயம் அரசாங்க பரிசீலனையில் இருக்கிறது.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, திண்டுக்கல் நகர மன்றத்தில் ஏகமனதாக வார்டு பிரிவினை செய்து அனுப்பிய தீர்மானத்தில் அரசாங்கம் தலையிடுவதற்குக் காரணம் என்ன? ஏன் தலையிட்டது ?

மாண்புமிகு திரு. எம். முத்துசாமி : அரசாங்கம் தலையிட உரிமையிருக்கிறது. அங்கே இருக்கிற கட்சிக்காரர்களும் பொது மக்களும் மாறுதல் செய்யவேண்டுமென்று அனுப்பிய வேண்டு கோளை ஏற்றுத்தான் அந்த மாறுதலைச் செய்தது.

Mariamman Temple, Ootacamund

*180 Q.—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether the Tamil Nadu Government gave any assistance for the renovation of the Mariamman temple at Ootacamund by granting Rs. 10,000 in the financial year 1966–67; and

(b) if so, whether there is any proposal to assist other temples also, in the same manner?

உதகை மாரியம்மன் கோவில்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு அறநிலைய பாது காப்பு அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1966-67-ஆம் நிதி ஆண்டில் உதகையிலுள்ள மாரியம்மன் கோவில் திருப்பணிக்காக தமிழக அரசு ரூ. 10 ஆயிரம் மானியமாக கொடுத்து உதவியதா ?

(இ) ஆமெனில், மற்ற கோவில்களுக்கும் இப்படி உதவும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா ?

10th March 1969]

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) ஆம்.

(இ) பண உதவி தேவைப்படுகிற, எளிய நிலையிலுள்ள ஏனைய கோவில்கள் திருப்பணிகள் நிறைவேற்றுவதாகயிருந்தால், நிதி வசதி அனுமதிக்கின்ற அளவிற்கும், அவை உதவி பெறுவதற்கான தகுதியைக் கருதியும், அவைகட்கு ஒவ்வோர் ஆண்டும் நிதி ஒதுக்குவது பற்றி ஆலோசிக்கப்படும்.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, இத்தகைய நிதி ஒதுக்கீடுகள் எத்தகைய நிலைமையிலுள்ள கோவில்களுக்குக் கொடுக்கப்படுகிறது ? எத்தகைய நிலையிலுள்ள கோவில் நிதியிலிருந்து கொடுக்கப்படுகிறது ? எந்தெந்த சமயத்தில் கொடுக்கப்படுகிறது என்று கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : தேவைப்படுகிற ரொம்ப எளிய நிலையிலுள்ள கோவில்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

MR. CHAIRMAN : Questions are over.

[Note—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—QUOTATION IN THE ASSEMBLY OF A MEMBERS' SPEECH IN THE COUNCIL

MR. CHAIRMAN : Hon. Members would remember that the hon. Member, Thiru N. R. Thiagarajan, Leader of the Opposition, raised a matter on the floor of this House on the 28th February that the Hon. the Leader of the House and the Chief Minister misquoted in the Assembly the speech made by Thiru R. Krishnaswamy Naidu in the Legislative Council.

The convention that allusions to debates in the other House of the current session are out of order, prevents fruitless arguments between members of two distinct bodies who are unable to reply each other, and guards against recrimination in the absence of the party assailed; but it is mainly founded upon the understanding that the debates of the other House are not known, and that the House can take no notice of them. But this rule has got an exception in view of the fact that the Government often find it. convenient to make in any one of the Houses or the other. official statements of their policy, and it is now permissible for Members to refer to and criticise such Government announcements.

The Hon. the Chief Minister has stated in the House on the 28th February that he has not misquoted the speech of Thiru Krishnaswamy Naidu but only stated the substance of what the Member stated here.

In view of the statement of the Hon. the Chief Minister that he has not misquoted the speech of the hon. Member but only stated the substance of what the hon. Member has stated in support of his argument, I feel that no further action need be taken and the matter may be closed.